

# பெரியார் பல்கலைக்கழகம்

தேசியத் தரமதிப்பீடு A++ தரச்சான்று – NIRF தரம் 56 – அரசு பல்கலைக்கழகத் தரம் 25

**சேலம் - 636 011**

**தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை**

**பேரறிஞர் அண்ணா இருக்கை**

**முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்**

# திராவிட இலக்கியம் - இதழியல்

## இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கம்




**நிகழிடம்**

**முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம்**

**பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011**

**நாள் : மார்ச் 2025**

## பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

சேலத்தில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பெற்றது. சமூக சீர்திருத்தவாதியான தந்தை பெரியாரை நினைவுகூர்தல் பொருட்டு பல்கலைக்கழகத்திற்குப் "பெரியார் பல்கலைக்கழகம்" எனப் பெயரிடப்பட்டது. "அறிவால் விளையும் உலகு" என்பது இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகும். இது சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளை உள்ளடக்கியது ஆகும். பெரியார் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகத் துறைகள், இணைவுபெற்ற கல்லூரிகள் மற்றும் பெரியார் தொலைதூரக் கல்வி நிறுவனம் ஆகிய மூன்று வழிகளில் உயர்கல்வியை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 27 துறைகளும், பல்கலைக்கழகத்தின் கீழ் 118 இணைவுபெற்ற கல்லூரிகளும் உள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகம் 8 துறைகளுடன் தர்மபுரியில் முதுநிலை விரிவாக்க மையத்தைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் 12(பி) மற்றும் 2(எப்) தகுதியினைப் பெற்ற இப்பல்கலைக்கழகத்திற்குத் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை "ஏ++" தரத்தினை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் 'அடல்' தரவரிசைப் பட்டியலில் 4ஆவது இடத்தையும், இந்தியக் கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியப் பல்கலைக்கழகங்களுள் 56ஆவது இடத்தையும், அரசு பல்கலைக்கழகங்களின் தரவரிசை பட்டியலில் 25ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

## தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை
## பேரறிஞர் அண்ணா இருக்கை
## முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய ஆளுமைகளின் சிந்தனைகள், சமூகப் பார்வை மற்றும் சமத்துவக் கருத்துகளை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் பெரியார் பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை; பேரறிஞர் அண்ணா இருக்கை; முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம் ஆகியன நிறுவப்பெற்றன. தொடர் கருத்தரங்குகள் நடத்துவது, மாநாடுகள் நடத்துவது, ஆய்வுத் தகைமைத் தொகை வழங்குவது, ஆய்வு நூல்களை வெளியிடுவது ஆகியனவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மையம் மற்றும் இருக்கைகள் செயல்பட்டு வருகின்றன. இம்மையத்தின் சார்பில் திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்னும் பகுதிநேர முதுநிலைப் பட்டயப்படிப்பும், திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்னும் பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வுப் பட்டப்படிப்பும் நடத்தப்பெற உள்ளன. பெரியார் பல்கலைக்கழகத்தில் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது கருத்துகளின் பொருண்மையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்குத் தகைமைத் தொகை வழங்குதல்; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நூல்களையும், அவர்தம் கருத்துகள் குறித்துப் பிற ஆளுமைகள் இயற்றிய நூல்களையும் ஆவணப்படுத்துதல் முதலான செயல்பாடுகள் ஆய்வு மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**கருத்தரங்கப் புரவலர்**

பேராசிரியர் **இரா. ஜெகநாதன்**

மாண்பமை துணைவேந்தர்

**கருத்தரங்க அமைப்பாளர்**

முனைவர் **இரா. சுப்பிரமணி**

இயக்குநர் (பொ.)

## அறிவிப்பும் அழைப்பும்

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பில் நடத்தப்பெறவிருக்கும் 'திராவிட இலக்கியம் - இதழியல்' என்னும் பொருண்மையிலான இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கிற்கு ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்களிடமிருந்து கீழ்க்காணும் பொருண்மைகளுள் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

## ஆய்வுப் பொருண்மைகள்

1. இலக்கியங்களில் திராவிடவியல் சிந்தனைகள்
2. திராவிடவியல் வளர்ச்சிக்கு இலக்கியங்களின் பங்களிப்புகள்
3. திராவிட இலக்கியங்களில் அழகியல்
4. திராவிட இலக்கிய ஆளுமைகள்
5. திராவிட இலக்கிய மொழிநடை
6. திராவிட மானுடவியல்
7. திராவிடவியல் ஆய்வுகள்
8. திராவிட இலக்கியக்கலை
9. திராவிட திரைக்கலை
10. திராவிட பேச்சுக்கலை
11. திராவிட நாடகக்கலை
12. திராவிட இயக்க ஆளுமைகள்
13. திராவிட இதழியல்
14. திராவிட இயக்க இதழ்கள்
15. திராவிட இயக்க இதழாசிரியர்கள்
16. மொழிவளர்ச்சியில் திராவிட இதழ்களின் பங்களிப்புகள்
17. திராவிட இயக்க இதழ்களின் விளைபயன்கள்
18. திராவிட இயக்க இதழ்கள் எதிர்கொண்ட சவால்கள்
19. திராவிட இயக்க இதழ்களின் சமூகப்பங்களிப்புகள்
20. திராவிட இயக்க இதழ்களின் வடிவமைப்பு

மேலும் 'திராவிட இலக்கியம் – இதழியல்' தொடர்பான பிற தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையலாம்.

## ஆய்வுக் கட்டுரைகளுக்கான வழிகாட்டுதல்கள்

1. ஆய்வுக்கட்டுரைகள் மேற்கண்ட பொருண்மைகளை அடிப்படையாகக்கொண்டும், இலக்கியப் படைப்புகள் மற்றும் இதழியல் இயங்கியலைத் திராவிடவியல் நோக்கில் அணுகும் பார்வையுடையனவாகவும் அமையப்பெறுதல் வேண்டும்.
2. ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் கட்டுரைகள் வழங்கலாம்.
3. ஆய்வுக் கட்டுரைகள் முறையான ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றியும், கருதுகோளை மையமிட்டதாகவும், புதுவிதமான ஆய்வுப்பார்வையை வெளிப்படுத்துவதாகவும், பிழைகளின்றி அமைதல் வேண்டும்.
4. கட்டுரைகள் ஒருங்குறி (யூனிகோட்) எழுத்துருவில் 12 புள்ளி அளவில் 1.5 இடைவெளியுடன் அமைதல் வேண்டும். கட்டுரைகள் 10 பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.
5. மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டளவில் மட்டுமே கட்டுரைகள் நூலாக்கத் தொகுப்பிற்கு ஏற்கப்படும். மேற்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றாத, மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டிற்குள் அமையாத கட்டுரைகளை நூலாக்கத் தொகுப்பிற்கு ஏற்க இயலாது.
6. ஆய்வுச் சுருக்கம் வழங்க இறுதி நாள்: 10.02.2025; கட்டுரைகள் வழங்க இறுதி நாள்: 28.02.2025.
7. கருத்தரங்கில் வாசிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் குறித்த தகவல்கள் 05.03.2025 இறுதிக்குள் தெரிவிக்கப்படும். கருத்தரங்கிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்கள் பதிப்புக் கட்டணம் செலுத்தும் முறை மின்னஞ்சல் வழியாகத் தெரிவிக்கப்படும்.
8. கட்டுரைகள் ISBN எண்ணுடன் நூலாக வெளியிட முயற்சிக்கப்படும். நூல் பதிப்பிற்கான தொகை குறித்த விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.
9. ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : kalaignarresearch@periyaruniversity.ac.in
10. 2025 மார்ச் நான்காவது வாரம் நடைபெறவுள்ள கருத்தரங்க நாள்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

### கருத்தரங்கப் பதிவுக் கட்டணம்

| | | |
|---|---|---|
| ஆய்வறிஞர்கள் மற்றும் பேராசிரியர்கள் | : | ரூ.1500 |
| ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் | : | ரூ.1000 |
| முதுநிலை மாணவர்கள் | : | ரூ.500 |

**தொடர்பிற்கு**

முனைவர் **இரா.சுப்பிரமணி**, இயக்குநர் (பொ.) [9444204387]

முனைவர் **ரா.சிலம்பரசன்**, கௌரவ விரிவுரையாளர் [8012193831]

தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை - பேரறிஞர் அண்ணா இருக்கை

முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்

பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011.

மின்னஞ்சல்: kalaignarresearch@periyaruniversity.ac.in

